## ★ இராணுவ தளபதிகளிடையே முரண்பாடு வலுக்கிறது!

விலை ரூபா 6-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 23 இதழ் 248
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10 - 10 - 1995

(கொழும்பு)

வடபகுதி ராணுவ நடவடிக்கை தொடர்பாக ராணுவ தளபதிகளிடையேயான முரண்பாடுகள் வலுத்துள்ளன என யுகதிய சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற மறைந்த கொப்பேகடுவவின் திட்டத்தை அமுல் செய்தல் ஆனையிறவிலிருந்து முன்னேறி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றல் ஆகிய இரு திட்டங்களையும் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக முன்னர் படைத் தளபதிகளிடையே இருந்த முரண்பாடுகளே தற்போது வலுத்துள்ளதாக யுக்திய பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. -மி

## வலி. கிழக்கில் இராணுவ இழப்புகள் அதிகரிப்பு

(கொழும்பு)

வலிகாமம் கிழக்கில் படையினர் மேற்கொண்ட மின்னல் தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலினால் படையினர் தரப்பிலான இழப்புகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின்போது காயமடைந்தவர்களில் பெரும் தொகையான படையினர் கொழும்பு, அனுராதபுரம் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செய்தித் தணிக்கையினால்

(6ம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி

# 9 கொமாண்டோ படையினர் பலி

## ஆயுதங்கள் மீட்பு; மூன்று போராளிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் நடத்திய 15 நிமிட அதிரடித் தாக்குதலில் 9 விசேட அதிரடிப்படையினர் பலியானார்கள் 7 படையினர் காயமடைந்தனர் பல ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன, மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

மட்டு. மாவட்டத்திலுள்ள மகா ஒயாவுக்கு கிழக்கே 27 கிலோமீற்றர் தூரத்திலுள்ள புலுக்குணவ என்னுமிடத்தில் கால்நடையாக ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 9 படையினர் ஸ்தலத்திலே பலியானார்கள் 7 படையினர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு 19ம் கட்டை

(6ம் பக்கம் பார்க்க)

## ஒரு பவள் கவச வாகனம் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலையடுத்து 19ம்கட்டை விசேட அதிரடிப் படை முகாமில் இருந்து தமது சகாக்களுக்கு உதவியாக மூன்று பவள் கவச வாகனங்கள் சகிதம் உதவிக்கு வந்த அதிரடிப் படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கினர்.

20 நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலில் ஒரு பவள் கவச வாகனம் தகர்த்தழிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மி

## வலி.கிழக்கில் நேற்று அதிகாலையில் ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 3-30 மணியளவில் சிறுப்பிட்டி நீர்வேலிப்பகுதிகளை நோக்கி இராணுவத்தினரால் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இப்பகுதிகளில் வந்து வீழ்ந்த வெடித்த ஷெல்லினால் பல வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளானது. பயன் தரும் மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன. இப்பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. இச்ஷெல் வீச்சினால் நீர்வேலிப் பகுதிகளில் அதிகமான வாழை மரங்கள் அழிந்துள்ளன. 162-மி

## கடற்படைக்கு தீவிர ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

கடற்படைக்கு தீவிர ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நேற்று அரசு தரப்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களை தங்கள் கல்வியையும் வயதையும் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன்

(6ம் பக்கம் பார்க்க)

## ★ 2-ம் லெப். மாலதி நினைவு நாள்:

## தமிழீழப் பெண்கள் எழுச்சி 'தினமாக இன்று உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் கோப்பாய் பகுதியில் வீரச்சாவை தழுவிக்கொண்ட இரண்டாம் லெப் மாலதியின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் இன்று யாழ். குடாநாடு பூராகவும் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்படும்.

விடுதலைப்புலிகளின் மகளிர் பிரிவில் முதற்களப்பலியான 2ம் லெப் மாலதியின் நினைவு தினமான இந்நாள் தமிழீழ பெண்கள் எழுச்சிதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகள், மகளிர் மன்றங்கள், கூட்டுறவு சங்கங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள், பொது அமைப்புக்கள் போன்றவற்றின் அலுவலகங்கள் எல்லாவற்றிலும் மாலதியின் திருவுருவப்படம்

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாண் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் பூராகவும் பாண் உற்பத்தி நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகக் கூடுதலான வெதுப்பகங்கள் பாணை குறைந்த அளவில் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கி வருகின்றன.

சில வெதுப்பகங்களில் பாண் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளன.

நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் கியூவில் நின்று பாணை பெற்றுக்கொண்டனர். 170-மி

## மட்டு. காஞ்சிரங்குடா வாவியில் படகு கவிழ்ந்து பத்து தமிழர்கள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் காஞ்சிரங்குடா வாவியில் பயணிகளுடன் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் அதில் சென்றவர்களில் பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர்.

பட்டிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா வாவியிலேயே நேற்று முன்தினம் இந்த பரிதாபகர சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த படகில் சென்ற

(6ம் பக்கம் பார்க்க)

காணமல் போனவர்களில்

## இரு மீனவரின் சடலங்கள் நேற்று கரையொதுங்கின

(யாழ்ப்பாணம்)

குருநகரிலிருந்து மீன் பிடிக்கச் சென்று காணமற்போன மீனவர்கள் இருவரின் சடலங்கள், துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை கரை ஒதுங்கின.

கடந்த சனிக்கிழமை பூநகரி-கல்முனைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற இந்த மீனவர்கள் காணமற்போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனி இரவு இவர்கள்

(6ம் பக்கம் பார்க்க)

# 2-ம்லெப் மாலதி நினைவு போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பெண்கள் ஆய்வு நிறுவனம் நடாத்திய 2-ம் லெப். மாலதியின் 8ம் ஆண்டு நினைவு இலக்கியப் போட்டி முடிவுகள்:

### சிறுகதை

1: ''எதிர்பார்ப்பு'' நந்தினி (ஆர்த்தி) பொற்பதி வீதி, கோண்டாவில். 2: ''இப்படியுமா'' ரெ. திலகவதி, பலாலி வீதி, கோண்டாவில் 3: ''வெட்கம் கெட்டவன்'' இ. ருக்ஷ்மிளா புஸ்பம் இல. 760, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

ஆறுதல்பரிசுகள்: 'தவிப்பு' செல்வி தவலட்சுமி தனபாலசிங்கம். வதிரி, கரவெட்டி. ''கறைகள்'' திருமதி அ. காசிலிங்கம், மலரவன் இல்லம் இராச வீதி, திருநெல்வேலி. ''சமுதாயத்தில் சில சந்தனங்கள்'' ஜெயசாந்தி சிவப்பிரகாசம் அமுதசுரபி, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

### கவிதை

1: ''என்னிப்பார் பெண்ணே', ஸ்ரனிஸ்லாஸ் கருணவதி, (திருமலைத் திருமதி), கமால் வீதி, இல. 501, யாழ்ப்பாணம். 2: ''இனியும் நீ'' அலைமிசை மே. பா. வி. வாசுகி. மயிலியதனை, தொண்டமானாறு. 3: 'நாற்றங்களை எரிப்பதற்காய்' செல்வி ச. கமலாம்பிகை, மீசாலை வடக்கு, மீசாலை.

ஆறுதல் பரிசுகள்: ''தோழி உனக்காக கூறுகிறேன் நில்'' சர்மிளா, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம், ''புரட்சிப் புருக்களாய் புறப்படுங்கள்'' செல்வி சிவகுமாரி வினைராசா, 43, கணேசபுரம், கிளிநொச்சி, ''யார் இவர்கள்'' ஐயாத்துரை சுதர்சினி கொக்குவில் கிழக்கு

இவர்களுக்குரிய பரிசில்கள் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. -சி

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வளர்ப்பதற்குரிய நல்ல இன பன்றிக் குட்டிகளும், செவ்விளநீர் தென்னங்கன்றுகளும் விற்பனைக்குண்டு: அண்ணா பாம், இணுவில். எ 5375

### தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த த. தர்மராசா, 82, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்பவருடைய குடும்ப அட்டையும், உலர் உணவு முத்திரையும் 7-10-95ல் பெரிய கடை யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சி 1703

நாவற்குழி, கைதடி, அரியாலைக்கு இடையில் எனது தேசிய அடையாள அட்டை பற்றுச்சீட்டு முக்கியமான ரசீதுக்கள் அடங்கிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. இராமகிருஷ்ணன், சீலன் நகர், நாவற்குழி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். ரூபா 1000/- சன்மானம் வழங்கப்படும். சி1701

### காணவில்லை

சில்வர் கிறேட் அல்ஷேசன் நாய் 8-10-95 இல் இருந்து காணவில்லை. இது பற்றிய தகவல் தெரிந்தோர் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: அருள்கடை, ஆஸ்பத்திரி முன்பாக, மானிப்பாய் சி 1702

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப் போத்தல், சகலவிதமான ரோச் லைற், விளையாட்டுப் பொருட்கள் [Sports Goods] சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5368)

## சவர்க்காரம் விலையேற்றம்

(அரயாலை)

யாழ் மாவட்டத்தில் சவர்க்காரங்களின் விலையேற்றத்தினால் பாடசாலை மாணவர்கள் உட்பட சகலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சன்லைட் சவர்க்காரம் ஒரு கட்டி 42 ரூபாவாகவும்வோண்டலைட் சோப் 36 ரூபாவாகவும் ஏனைய சவர்க்காரங்கள் 30 ரூபாவிலிருந்து40 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. 59

## அறிவியல் கழக செயற்பாட்டு வாரம்

[யாழ்ப்பாணம்]

''நேற்று 9-ம் திகதியிலிருந்து 14ம் திகதி வரையிலான வாரம் கோண்டாவில் மாணவர் அறிவியல் கழகத்தின் உறுப்பினர் செயல்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாரத்தில் நாளை 11ம் திகதி புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு கழக மண்டபத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கான முக்கிய கலந்துரையாடலும் இடம்பெறும்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

வவுனியாவிற்கு, பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கான நேர் முகப்பரீட்சைக்கு செல்ல விருப்பவர்கள் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் கூடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நேர் முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடாத்த முயற்சி எடுக்க விருப்பதால் தவறாது சமூகமளிக்கவும். -சி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-10-10**

செவ்வாய் இரவு

8-02 சிறப்பு நிகழ்ச்சி செல்வி பூரணு வேலுப்பிள்ளை எழுதிய '2ம் லெப்ரினன்ட் மாலதி'

8-30 செய்திகள்,

8-40 சுருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய பொய்யும் புரட்டும்.

8-50 மலரும் மொட்டுக்கள்

**1995-10-11**

புதன காலை

7-02 மாவீரவணக்கம்,

7-15 நீங்கள் கேட்டவை

7-30 செய்திகள்,

7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத்தொடர்ந்து

8-00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-10-10**

செவ்வாய் மாலை

5-01 சிந்தனைச்சிதறல்

5-02 எழுச்சி கீதம்

5-10 புதியவை

5-15 தமிழிசை

5-30 வானொலி மதியூகம்

6-00 சிந்தனைக்குச் சில விளுடிகள்

6-02 என்தெரிவு

6-10 செய்திகள்

6-15 விளையாட்டுச் செய்திகள் அதனைத்தொடர்ந்து

6-30 மணிவரை இவ்வாரம் இவர்

## விளையாட்டு மைதானம்

(தெல்லியடி)

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு மாணவர் நலன்கருதி விளையாட்டு மைதானம் வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர் நலன் விரும்பிகளினால் மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

பாடசாலைக்கு அருகிலுள்ள சுமார் பத்துப்பரப்பு காணியை வாங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. 150

## அருள்மாத திருவிழா

(அரியாலை)

யாழ்இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலய 9 வது ஆண்டு நிறைவு விழா கடந்த 7ந் திகதி மாலை யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஜே. நீக்கலஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது. -59

## வலிமேற்கில் தஞ்சம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கை காரணமாக தங்கள் பதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ள உரும்பிராய், புன்னாலைக் கட்டுவன், புத்தூர் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த குடும்பங்கள் பல வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள தங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் வந்து தங்கியுள்ளனர். -72

## இராசி பலன்

**10-10-1995**

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 23]

துதியை முன்னிரவு 10-42 வரை, அச்சுவினி பி. ப 4-11 வரை, அமிர்தசித்தயோகம், இராகு காலம் மாலை 3-02 முதல் 4-32 வரை: சுபவேளை காலை 10-32 முதல் 12-02 வரை

மேஷம்: நற்பெயர், தொழில் லாபம், அதிகாரம்.

இடபம்: முட்டுக் கட்டை, தவறுனபோக்கு. அலைச்சல்.

மிதுனம்: இனியசம்பாசனை, தாயார்உதவி, காரியசித்தி.

கடகம்: புதியமுதலீடு, நண்பர் அறிவுரை, பயணம்.

சிங்கம்: உறவினர்சங்கடம் மனச்சுமை, கெட்டசகுனம்

கன்னி: தொழில் பங்கம், அமைதிக்குறைவு, யோசனை.

துலாம்: பணிந்துபோதல், குடும்பசிறப்பு. தானதர்மம்.

விருச்சிகம்: முதியவர் ஆசி, பணவரவு, சுபச்செலவு.

தனுசு: குடும்பவேற்றுமை, தொழிற்கஷ்டம், ஏமாற்றம்.

மகரம்: கருத்து மோதல், சகோதரிவெறுப்பு, மரியாதைக்குறைவு.

கும்பம்: எதிர்பாராதஉதவி மாமனார்பெருமை, தெய்வீகச் செலவு.

மீனம்: அயவர்நட்பு, கோபவார்த்தை, வேலைப்பளு.

— ஜோஸ்யர்

## கைதடிஆயுர்வேத வைத்தியசாலையில் நோயாளர் அதிகரிப்பு

[மானிப்பாய்]

கைதடி சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் நோயாளிகள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

வைத்தியசாலையிலிருந்து கிடைக்கப் பெற்ற புள்ளி விபரத்தின்படி இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் 2936 நோயாளிகளும், பெப்ரவரி மாதத்தில் 2986 பேரும், மார்ச் மாதத்தில் 3475 பேரும் ஏப்பிரல் மாதத்தில் 3578 பேரும், மே மாதத்தில் 3892 பேரும், யூன்மாதத்தில் 8943 பேரும், யூலை மாதத்தில் 4143 பேரும், ஒகஸ்ட் மாதத்தில் 4236 பேரும், செப்ரம்பரில் 4379 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாக அவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி இந்திரா சத்தியானந்தா தெரிவித்துள்ளார். 71

## நாட்டின் உணவுப்பொருள் தவிர்ந்த ஏனையவற்றின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உணவுப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களின் விலை சராசரியாக 3.3 வீதமாக அதிகரித்துள்ளதை மத்திய வங்கியின் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

தற்போது அறுவடைக் காலமாதலால் மரக்கறி வகையினதும் அரிசி வகையினதும் விலைகளில் வீழ்ச்சி காணப்பட்டுள்ள போதும் இது ஒரு தற்காலிகமானதே என மத்திய வங்கியின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த மூன்று மாதத்தில் உணவுப் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதும் வாழ்க்கைச் சுட்டெண் அதிகரித்துள்ளதையும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

ஆகஸ்ட்டில் 8,6 ஆக இருந்த சுட்டெண் கடந்த மாதம் 10.6 ஆக அதிகரித்துள்ளது பணவீக்கமானது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் சராசரியாக 14 வீதத்தால் அதிகரித்துள்ளது. சி

## மரக்கறி விதைகள் விவசாயிகளுக்குவிநியோகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் உள்ளூர் மரக்கறி விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்றை, புடோல், பாகல் கத்தரி, வெண்டி, பூசணி போன்ற உள்ளூர் மரக்கறி விதைகள் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

இவ்விதைகள் தேவைப்படும் விவசாயிகள் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று உதவி விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார். 170:சி

## வவுனியா தடை முகாமில் பயணிகள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு சாரங்களை எடுத்து வந்த சில பயணிகள்வவுனியா தடை முகாமில் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானுர்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து பலதரப்பட்ட பொருட்களுடன் சாரங்களையும் சில பயணிகள் எடுத்து வந்தனர்.

வவுனியாவில் இவற்றைப் பரிசோதனை செய்த படையினர் சாரங்கள் எடுத்து வருவது தடைசெய்யப்பட்டுள்ளது தெரியாதா எனக் கேட்டு பயணிகளை தாக்கினுர்களாம்

பின்னர் கறுப்புக் குடை றெபின் கோட் ஜாம் போன்ற பொருட்களும் பயணிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சி

## கிரிக்கெட்: இலங்கை அணி ஸார்ஜா பயணம்

(கொழும்பு)

ஸார்ஜாவில் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள 3 நாடுகள் கலந்து கொள்ளும் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றுவதற்காகஇலங்கை அணி நேற்று ஸார்ஜா பயணமானது.

14 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை அணிக்கு அர்ச்சுன ரணதுங்க தலைமை தாங்குகிறுர். ரோசான் மாநாம, அரங்க குருசிங்கா' அரவிந்தடி சில்வா, சந்திக்கா ஹத்துருசிங்க, ஹஸான் திலகரட்ண, சனத் ஜெயசூரியா, றுவான் கல்பகே' ரோமேஸ் கழுவிதாரண, குமார் தர்மசேன, முத்தையா முரளிதரன், எம்க் உபசாந்த, இறகாம்லப்ரோய், பிரமோதய விக்கிரமசிங்க ஆகியோர் இலங்கை அணியில் பங்கு பற்றுகின்றனர். இப்போட்டியில் உடல்நிலை காரணமாக ஸமிந்த வாஸ் பங்குபற்ற வில்லை.

11ம் திகதி ஆரம்பமாகும் போட்டியில் இலங்கை மேற்கு இந்திய அணிகள் மோதுகின்றன. 12ம் திகதி பாகிஸ்தான் எதிர் இலங்கை, 13ம் திகதி பாகிஸ்தான் எதிர் மே. இந்தியா, 15ம் திகதிபாகிஸ்தான் எதிர் மே. இந்தியா. 16ம் திகதி இலங்கை எதிர் மே. இந்தியா, 17ம் திகதி பாகிஸ்தான் எதிர் இலங்கை, 20 திகதி இறுதிப் போட்டி. சி

## உலர் உணவு விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கடந்த யூலை மாதத்தில் இடம்பெற்ற முன்னேறிப் பாய்தல் என்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண பொருட்களை சங்க கிளைகள் ஊடாக வழங்கி வருகின்றது.

கிராம சேவை அலுவலகத்தால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரம், குடும்ப அட்டை தேசிய அடையாள அட்டை அ, உ பங்கீட்டு அட்டை ஆகியனவற்றை சமர்ப்பித்து இந்த உலர் உணவு நிவாரணத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப் படுகின்றது. 72

**மணிவாக்கு**

ஒருவனது குற்றங்களைப் பற்றி பேசுவதனால் அவனுக்கு ஒருநாளும் நீ உதவி செய்தவனாக மாட்டாய். மாறாக அவனுக்கும் கேடு செய்து உனக்கும் கேடு இழைத்துக் கொள்ளுகிறாய்.

— சுவாமி விவேகானந்தர்

## நமது நோக்கு

### உணவு நிலை மோசமடைகிறது

யாழ். குடாநாட்டில் உணவு நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி மற்றும் உபஉணவுப் பொருட்களுக்கு இப்பவே தட்டுப்பாடு நிலவுகிறது. இன்னும் இரண்டொரு கிழமைகளில் நிலைமை மேலும் மோசமடையும்.

இவ்வாறிருந்தும் அரசு குடாநாட்டின் உணவு நெருக்கடியை தீர்த்து வைப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்குப் பதிலாக நிலைமையை மோசமடையச் செய்வதற்கான நடைமுறைகள் பற்றி பரிசீலனை செய்து வருகிறது. 'ஹெந்தலக் கப்பல் கடைசியாக மாவுடன் கடந்த செப்ரெம்பர் எட்டாம் திகதி பருத்தித்துறைக்கு வந்தது. அதன்பின்னர் உணவுக்கப்பல் எதனையும் அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஹெந்தலகப்பல் யாழ். குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களை எடுத்துவருவதற்காக யாழ். செயலகத்தால் வாடகைக்கு அமர்த்தப்பட்டது. குடாநாட்டிற்கு மீண்டும் மா ஏற்றி வருவதற்காகச் சென்ற இக் கப்பலை அரசு கொழும்புக்கு வெங்காயம் ஏற்றிவர இந்தியாவுக்கு அனுப்பியுள்ளது. இது அரசினால் வேண்டுமென்று திட்டமிட்டு செய்யப்பட்ட செயல்.

மேலும் வடக்கே வரும் கப்பல்களை வாடகைக்கு விட்டுள்ள கப்பல்கம்பனிகள் தமது கப்பல்களை இங்கே சேவைக்கு விட அச்சம் தெரிவிக்கின்றன என்று கூறி உணவுப் பொருட்களை அனுப்புவதற்கு திட்டமிட்ட முறையில் அரசு பின்னடிக்கிறது.

இதேவேளை குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நேரடியாகப் பருத்தித்துறை துறைமுகத்துக்கு அனுப்பாது காங்கேசன்துறை துறைமுகத்திற்கனுப்பி அங்கிருந்து பின்னர் சிறு கப்பல்கள் அல்லது இழுவைக்கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவர அல்லது தரை வழியாக யாழ்ப்பாணம் கொண்டுவர அரசு யோசிப்பதாகவும் தெரிகிறது. அவ்விதம் செய்வது நிலைமையை மேலும் மோசமாக்கும். இவ்விதம் அரசு செயற்பட்டால் குறைந்த அளவு உணவுப் பொருட்களே குடாநாட்டுக்கு வந்துசேரும்'

மேலும் உணவுப் பொருட்களை காங்கேசன் துறைக்கு எடுத்து வருவதென்ற செயற்பாடு அரசின் யுத்த தேவைகளையும் பூர்த்தி செய்யும் படையினருக்குத் தற்போது தடைப்பட்டுள்ள விநியோகங்களையும் உணவுக்கப்பல் என்ற போர்வையில் அரசு அனுப்பி வைப்பதற்கு உதவும்.

அரசாங்கமோ யாழ். அரச அதிபர் யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு உள்ளதென்று புள்ளி விபரங்களோடு கொடுக்கும் தகவல்களை ஏற்காது இங்கு பொருட்கள் தாராளமாக இருக்கிறதென்று பிரசாரம் செய்து வருகிறது இதை கொழும்பில் இயங்கும் சர்வதேச அமைப்புக்களின் இணையம் கண்டித்துள்ளமை கவனிக்கப்பட வேண்டும். யாழ். உணவு நிலை குறித்து அத்தியாவசிய சேவைகள் நாயகம் வெளியிட்ட அறிக்கையில் உள்ள தகவல்கள் உண்மையல்லவென்றும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமது கிளை அலுவலகங்கள் மூலம் கிடைத்த தகவல்களிலிருந்து உண்மை நிலை தமக்குத் தெரிய வந்துள்ளதாக இவ்விணையம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

ஆக்கிரமிப்பு இனப்படுகொலை இராணுவநடவடிக்கையில் ஈடுபட்டுவரும் அரசின் உண்மை நோக்கங்களை மூடி மறைப்பதற்கு மேற்குலகில் குறிப்பாக ஐ. நா. சபையில் பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர். அதே நேரத்தில் பத்திரிகைத் தணிக்கையை விதித்துவிட்டு தான் திட்டமிட்டு உணவுப் பொருட்களை வடபகுதிக்கு அனுப்பாதிருக்கும் கொடூரச் செயலை மூடி மறைப்பதற்கு குடாநாட்டில் தேவைக்கு அதிகமான உணவுப் பொருட்கள் கையிருப்பிலுள்ளது. அங்கு பட்டினிஎன்ற பிரச்சினைக்கே இடமில்லையென்று அரசின் சார்பில் அத்தியாவசிய சேவைகள் நாயகம் பொய்த் தகவல்களையும் அறிக்கைகளையும் விடுகிறார். ஆனால் உண்மைகளை நெடுங்காலத்துக்கு மறைக்க முடியாது. எப்படியும் அது வெளிவரும் வெளிவந்தும் விட்டது. அத்துடன் அரசின் ஈனச்செயல் வெளிநாட்டவர்களுக்குமல்லவா தெரியவருகிறது.

# செய்தித் தணிக்கைக்கு எதிராக ஐ. தே. க. நேற்று வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அரசு அமுல்படுத்தியுள்ள செய்தித் தணிக்கை முறையை எதிர்த்து ஐ. தே. க நேற்று வழக்கு தாக்கல் செய்துள்ளது

உள்ளூர் பத்திரிகைகளுக்கு அரசு விதித்துள்ள தணிக்கை முறையை ஆட்சேபித்தும் அரசு, மனித அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் குற்றம் சாட்டியே உயர் நீதிமன்றில் ஐ. தே. க எம்.பிக்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பொ. ச. மு அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை புறக்கணித்து வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்குவதுடன் தற்போது நாட்டில் நடைபெறும் போர் பற்றிய செய்திகளை இருட்டடிப்பு செய்ய முயல்வதாகவும் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மைக்காலத்தில் வடக்கு-கிழக்கில் படையினருக்கு ஏற்பட்ட பல இழப்புக்களை மறைக்கவே அரசு செய்தித் தணிக்கையை அமுல்படுத்தியுள்ளதாகவும் இதனால் தெற்கில் வதந்திகள் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# காமன்வெல்த் மாநாட்டில் சந்திரிகாவின் உரைக்கு ஐ.தே.க. பலத்த கண்டனம்

[கொழும்பு]

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான பொது நலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா ஆற்றிய உரைக்கு ஐ. தே க. நாடாளுமன்ற எம். பிக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற முறைக்கு மாறாகவும், சர்வதேச மாநாடொன்றென்பதை மறந்தும் ஜனாதிபதி சந்திரிகா பொது நலவாய அமைப்பு நாடுகளின் எம். பிக்கள் கலந்துகொண்ட ஐந்து நாள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றியுள்ளார்.

இந்த மாநாட்டிற்கு முற்றிலும் அப்பாற்பட்டதான உள்நாட்டு அரசியலை அதுவும் ஒரு பக்கசார்பாக ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றியுள்ளார் அதன்மூலம் அவர் நாடாளுமன்ற முறையை புறக்கணித்துள்ளதாகவும் ஐ. தே. க. எம். பிக்கள் பலத்த ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்

இருபத்தைந்து வருடகாலத்தில் இலங்கை இரண்டு பயங்கரமான இளைஞர் எழுச்சிகளை கண்டுள்ளதாகவும். தற்போதைய வடக்கு-கிழக்கு பிரச்சினைகள் குறித்தும் ஐ. தே. க. ஆட்சிக்கால சம்பவங்கள் குறித்தும் ஜனாதிபதி ஒருபக்க சார்பாக உரையாற்றியமைக்கே ஐ. தே. க. தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. சி

# கடமைக்கு வராத டாக்டர்களின் சம்பளம் வழங்கப்படமாட்டாது

[கொழும்பு]

கடமைக்கு சமூகமளிக்காத வைத்தியர்களின் சம்பளம் வழங்கப்படமாட்டாதென சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அரச வைத்தியர்கள் சங்கம் அறிவித்திருந்த போதும் இதுவரை அவர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கவில்லை. எனினும் வேலை நிறுத்தத்திற்கான முஸ்தீபுகளில் வைத்தியர்கள் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் வைத்தியர்கள் சங்கம் தங்கள் பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களை நடாத்த முன்வரவேண்டுமென கோரியுள்ள அமைச்சர் பௌஸி, தமது கடமைகளுக்கு சமூகமளிக்காத டாக்டர்களின் சம்பளம் வழங்கப்படமாட்டாதெனவும் கூறியுள்ளார்.

மேலும் வைத்தியர் சங்கத்தின் வேலை நிறுத்த போராட்டம் ஆரம்பிக்கப்படுவதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமைச்சர் வேலை நிறுத்தம் இடம்பெறுமாயின் அதற்கான மாற்று ஒழுங்குகள் குறித்தும் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது. சி

# பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக வேறு ஆவணங்கள் ஏற்கப்படும்!

(கொழும்பு)

பிறப்புச் சான்றிதழுக்காக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேறு பல ஆவணங்களையும் பதிவாளர் நாயகம் திணைக்களம் தற்போது அறிமுகம் செய்துள்ளது.

பிறப்புப் பதிவாளரினால் இலவசமாக வழங்கப்படும் பிறப்பு டாப்பின் பிரதி ஒன்றையும் பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக சமர்ப்பிக்கலாம் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. ஆர். எஸ். ஜெயரத்ன விடுத்த சுற்றுநிருபமொன்றில் தெரிவித்துள்ளார்.

பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரதி செய்யப்பட்ட குறிப்பு. உத்தேச வயதுச் சான்றிதழ் சுவீகார சான்றிதழ், பிறப்புப் பதிவேட்டிலிருந்து சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஆகியவற்றையும் பிறப்புச் சான்றிதழுக்கு பதிலாக சமர்ப்பிக்கமுடியும். -சி

# இரத்தினபுரியில் மண்சரிவில் சிக்கி மூவர் உயிருடன் புதையுண்டனர்

(கொழும்பு)

இரத்தினபுரி மாவட்டத்தில் அடைமழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவினால் மூவர் உயிருடன் புதையுண்டு போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக கொட்டிவரும் அடைமழை காரணமாக பெரும் வெள்ளப் பெருக்கும் மண்சரிவும் ஏற்பட்டுள்ளது. பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இவ்வாறான தொரு மண்சரிவு 'தகிலகல' என்னுமிடத்தில் ஏற்பட்ட போது வீடுகளில் இருந்த மூவர் இந்த மண்சரிவினுள் சிக்கி உயிருடன் புதைந்து போய் விட்டதாகவும் பல வீடுகளும் இவ்வாறு மண் சரிவினுள் சிக்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இரத்தினபுரி

(5ம் பக்கம் பார்க்க)

### பாரதப் படை எடுப்பு!

பூவோடு சோலை பூத்திருக்க
புனிதமாய் காற்றலை தவழ்ந்துவர
தமிழீழமண் சுதந்திர மூச்சுவிட
பார்த்திருக்க முடியாத பாரதம்
படை யெடுத்தது கடல்கடந்து.
பத்தாம் திங்கள் பத்தாம்நாளில்
பரிநாசம் செய்யத் தொடங்கின
பாதம் பதித்த பாரதப்படைகள்
எட்டப்பர் கூட்டத்துடன் எடுத்தபோர்
எட்டாண்டு ஓடியும் நெஞ்சகலவில்லை.
வீடுகள் கட்டிடங்கள் பாழடிந்துபோக
வீதிதோறும் உடல்கள் மிதக்க
பாரதம் செய்த கொடூரம்
பட்டென கேட்குது செவியில்;

— உயிரவன்

# தனியார் மயமாக்கலை உலகவங்கி ஆதரிக்கிறது

(கொழும்பு)

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் அரசாங்கங்களிற்கு சொந்தமான கம்பனிகளை தனியார் கைக்கு மாற்ற வேண்டுமென உலகவங்கி தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதன்மூலம் போட்டி அதிகரித்து அவை பெருமளவு லாபம் ஈட்டும் சாத்தியம் இருப்பதாகவும் உலகவங்கி தெரிவித்துள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

# ரொறிங்டன் சதுக்கக் குண்டுவெடிப்பு

**('ஐலண்ட்' 13-08 1995)**

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தற்கொடைகுண்டாளிகள் இருவர், வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட தள்ளுவண்டி ஒன்றுடன் ரொறிங்டனுக்கும் சதுக்கத்திற்குமிடையில் இரண்டு நாட்களாக அமைதியாக காத்துநின்றனர்.

உந்துருளிகள் படையினர், கடற்படையினர், வான் படையினர் அல்லது அதிரடிப் படையினர் அடங்கிய ''லாண்ட் ரூேவர்'' வாகனங்களால் பாதுகாக்கப்பட்ட நிறம் தீட்டப்பட்ட புத்தம் புதிய ஒளிமிகு சொகுசு வாகன அணி ''ஒலி'' எழுப்பியவாறு விரைந்து வரும் வரையிலும் இவர்கள் காத்து நின்றனர்.

இவர்களுடைய இலக்கு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையை தவிர வேறு எவரும் அல்லர். அவ்வழியால் செல்லும் முதலாவது வாகன அணி அவருடையதாக இல்லாவிட்டால் அவர்களது இலக்கு அவ்வாறு பெரும் பாதுகாப்புடன் செல்லும் அதிரடிப் படையினர் அல்லது கடற்படையைச் சேர்ந்த அதிரடிப் படையினர் வான்படையைச் சேர்ந்த அதிரடிப் படையினராக இருக்கலாம். அந்த தற்கொலைப் படையாளிகள், மிகவும் டாம்பீகமான தோற்றத்தைக் கொண்ட வாகனம் தமக்குச் சரி சமாந்தரமாக வரும்வரையும் காத்து நிற்பர். ஆனால் இவ் வாகனம் தம்மைக் கடந்து செல்வதற்கு முன் பல நிறங்களைக்கொண்ட செவ்விளநீருடன், செவ்விளநீர் வண்டிபோல் காட்சி கொடுத்த தள்ளுவண்டியின் கைபிடியில் உள்ள 'குமிழை' இவர்கள் தட்டி விடுவர். உடனே தள்ளுவண்டியின் கீழ்பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட 10 கிலோ கிராம் எடையுள்ள சி 3 ரக வெடி குண்டு. மேலும் ஒரு முக்கிய அமைச்சரை அல்லது புலிகளை நசுக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள அதிகாரியைக் கொல்லும்.

குமார் என்று அழைக்கப் படுகின்ற சின்னையா சிவநாதன் 1994ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து கொழும்பில் வசித்து வந்தார். திருகோணமலை வாசியான இவர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறைப்பிரிவின் நடவடிக்கையைக் கொழும்பில் செயற்படுத்துபவர்களில் ஒருவராவார். இவர்தான் அந்த இரண்டு கொலையாளிகளின் தலைவராவார்.

இருபத்தாறு வயதுடைய தங்கவேலு சிவபாதன், யாழ் மாவட்டத்தில் கோண்டாவிலைச் சேர்ந்தவராவர். மூன்றாம் வகுப்புவரை மட்டும் கல்வி பயின்ற இவர், இன்னும் 300 பேருடன் 1990ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். தொடக்கப் பயிற்சி பெற்றதன் பின்னர், சிறப்பு உளவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திரு. பொட்டு அம்மானால் பொறுக்கி எடுக்கப்பட்ட பதினைந்து பேர் கொண்ட குழுவில் இவரும் ஒருவராவார்.

சிவபாதன், கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் இருமுறை கொழும்பிற்குச் சென்றுள்ளார். இவர் தனது இறுதிப் பயணத்தை இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் மேற்கொண்டார். ஒவ்வொரு தடவையும் அவர் தனது உளவுநடவடிக்கைகளை முடித்துக் கொண்டு வடபகுதி திரும்பியுள்ளார்.

ஜூலை மாதத்தில் கொழும்பு திரும்பிய போது கோட்டைப் புகைவண்டி நிலையத்தில் வைத்து குமார் இவரைச் சந்தித்தார். குமாரை சிவபாதன் முன்னர் ஒருபோதும் சந்திக்கவில்லை. தான் தங்குவதற்காக நாளொன்றுக்கு 50 ரூபா கொடுக்கும் ஆனந்தன் என்பவருக்குச் சொந்தமான நாரஹென்பிட்டியிலுள்ள சேரி வீடொன்றுக்குக் குமார் இவரைக் கூட்டிச் சென்றார்.

இவ்விருவரும் பல கிழமைகளாக கொழும்பு கறுவாக் காட்டைச்சுற்றி தள்ளுவண்டியைத் தள்ளிவந்தனர். அந்தத் தள்ளுவண்டியில் வெடிப் பொருட்கள் இருக்கவில்லை. செவ்விளநீர்க் குலைகள் மட்டும் இருந்தன.

இதன் நோக்கம் இப்பகுதியில் தம்மை பழக்கப்படுத்திக் கொள்வதுடன் ஒவ்வொருநாட் காலையிலும் ''ஸ்ரன்மோர் கிறெசன்ற் [Stanmore crescent] மற்றும் பௌத்தலோக மாவத்தையிலுள்ள [Bouddhaloka mawatha] உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து ரத்வத்தையும் மற்றும் படைதளபதிகளும் எத்தனை மணிக்குப் புறப்படுகின்றனர்? எத்தனை மணிக்கு அநேகமாகத் திரும்புகின்றனர்? என்பதை அறிந்து கொள்வதாகும்.

ஆனால் அவர்களின் முக்கிய நோக்கம், இப்பகுதியிலுள்ள மூன்று சோதனைச் சாவடிகளிலும் கடமையில் ஈடுபட்டுள்ள காவல் துறையினர், கடற்படையினர் வான் படையினர் மத்தியில், தாங்கள் இந்த வீதிகளில் யாரமான தள்ளுவண்டியைத் தள்ளிச் செல்கின்றவர்கள் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகும்.

ஆகஸ்ட் மாதம் நாலாம் நாளன்று நாரஹென்பிட்டியில் இன்னுமோர் அறையில் வசித்து வந்த குமார் மூன்று மணிநேரம் வெளியே சென்று விட்டு, ஒரு புத்தம் புதிய தள்ளுவண்டியுடன் திரும்பி வந்தார்.

இத்தள்ளுவண்டியின் அடிப்பாகத்தில் பத்து பலவகைப் பெட்டிகள் பொருத்தப்பட்டிருந்தன ஒவ்வொரு தட்டிலும் 5 கிலோ எடையுள்ள வெடி பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

பலத்த பாதுகாப்பின் மத்தியில் வரும் நிறந் தீட்டப்பட்ட கண்ணாடிகளை கொண்ட வாகன அணியொன்றைத் தகர்ப்பதே, எமது பணியாகும் என்று குமார் சிவபாதனுக்கு கூறினார்.

எனினும் கொளுத்துகின்ற வெயிலிலும், தூசு படர்ந்த சூழலிலும் ஐம்பது கிலோ கிராம் எடைகொண்ட வெடிப் பொருட்களுடன் இந்த வண்டியை தங்களால் நாள் பூராவும் தள்ளிச்செல்ல முடியாதென்பதை இந்த இரண்டு கொலையாளிகளும் கண்டு கொண்டனர்.

சிலநேரம் கலந்துரையாடிய பின்னர், தங்களது வேலைக்குப் பத்து கிலோ கிராம் எடையுள்ள வெடிப்பொருட்கள் போதுமானவை என அவர்கள் தீர்மானித்தனர். அத்துடன் வெடிப் பொருட்களை கொண்ட எட்டு பலகைகளை இவர்கள் வண்டியிலிருந்து அகற்றினர்.

அந்தச் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் இவ்விருவரும் நாகரிக மட்டத்தினர் வாழும்பகுதியானகறுவா தோட்டத்தின் (Cinnamon Gardens) தெருக்கள் ஓரமாக அங்குமிங்குமாக சுற்றித் திரிந்தனர். மற்றவர்கள் தம்மீது சந்தேகம் கொள்ளாதவாறு இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டனர்.

சிலவேளைகளில் இவர்கள் ''தம்புள்ள'' சந்தியில் காணப்பட்டனர். மற்றைய நேரங்களில் இவர்கள் சுதந்திர சதுக்கத்தை சென்றடையும் 'ஹவ்லொக் ரவுண்' [Havelock Town] மற்றும் நாரஹென்பிட்டி போன்ற பகுதிகளூடாக செல்வர். படையினரின் இரண்டு சோதனைச் சாவடிகள் புல்லேர்ஸ் வீதியில் (Bullers Road) உள்ளதனால் படையினர் தம்மீது சந்தேகம் கொள்வர் என்ற அச்சம் காரணமாக இவர்கள் அங்கு செல்வதில்லை.

ஆனால் அதிர்ஷ்டம் இவர்கள் பக்கம் இருக்கவில்லை. ஒருவேளை வார இறுதி என்ற காரணத்தினாலோ அன்றி இவ்விருவரும் சரியான இடத்தில் இல்லாமல் இருந்த காரணத்தினாலோ ரத்வத்தையும் படைத் தளபதிகளும் அடுத்த வார இறுதியின் போது இவர்களை கடந்து செல்லவில்லை.

ஆகஸ்ட் மாதம் ஆறும்நாள் ஞாயிறன்று மதிய நேரம் இவர்கள் மானிங் ரவுணில் தள்ளுவண்டியுடன் நின்ற போது பொரளை காவல் துறை பணிமனையில் கண்காணிப்புப் பிரிவை சேர்ந்த உப பரிசோதகர் கே. பி. பசில்டஸ் (K. B. Basildus) இவர்களிடம் சென்றார்.

இவ்விருவரும் தமிழர்களாக இருக்கவேண்டும் என்று சந்தேகித்த அவர், எவ்விடத்தைச் சேர்ந்தவர்களென்று இவர்களை வினவியதுடன் இவர்களுடைய அடையாள அட்டைகளையும் சோதித்துப் பார்த்தார்.

கொழும்பில் ஓர் ஆண்டுக்கு மேலாக இருந்த திருகோணமலை வாசியான குமார் சிங்களத்தில் நன்கு பேசி, தான் மலையக தமிழன் என்றும்.

செவ்விளநீர் விற்று தனது ஜீவனோபாயத்தை நடத்தும் முகமாகக் கொழும்பிற்கு வந்துள்ளார் என்றும் கூறி அந்தக் காவல்துறை அதிகாரியை நம்பவைத்தார்.

என்னும் சிவபாதன் சிங்களத்தில் எதையும் கதைக்கவில்லை. சிவபாதன் தனது உதவியாளர் என்று குமார் உறுதியளித்தும் ஏப்ரல் மாதம் 19-ம் திகதியிலிருந்து கொழும்பில் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களைக் கைது செய்தமை போன்று பசில்டஸ் (இன்ஸ் பெக்டர்) சிவபாதனையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் இல்லையென்று காவல் துறையினர் திருப்தி கொண்டால் அவர் விடுதலை செய்யப்படுவார்.

தங்கள் இருவரையும் கைது செய்ய முயன்றால் வெடிகுண்டை வெடிக்க வைக்கும் முகமாக குமார் ஏற்கனவே உட்பக்கமாகவுள்ள திறவுகோலைத் திருப்புவதற்கு தயாராகவுள்ளார் என்பது இந்த அப்பாவி பசில்டசுக்குத் தெரியாது. இவ்இருவரையும் கைது செய்ய பொலிஸ்காரர் முற்பட்டிருந்தால் குமார் குண்டை வெடிக்க வைத்து மூவரையும் முடித்திருப்பார்.

ஏனெனில் சதிஅம்பலமாகும் பட்சத்தில் உடனடியாகக் குண்டு வெடிப்பை ஏற்படுத்தி உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டுமென்று விடுதலைப் புலிகள் குமாருக்கு கட்டளையிட்டிருந்தனர். பலமாதங்களாகப் பொது இடங்களில் இவர்கள் நடமாட வேண்டியிருந்ததன் காரணமாக இவர்கள் 'சயனைட்குப்பிகளைக்' காவிச் செல்லவில்லை. அத்தோடு இவர்களுடைய கழுத்தைச் சுற்றியுள்ள சயனைட்குப்பிகளைக் காவல்துறையினர் கண்டு கொள்வதால் ஏற்படும் அபாயமும் அதிகமானதாகும்.

அன்று மாலை சிவபாதனை பார்ப்பதற்காக காவல்துறை பணிமனைக்குச் சென்ற குமார் இருக்க வேண்டுமென்று அவரை எச்சரிக்கை செய்தார்.

திங்கட்கிழமை காலைபெருந் தொகைப் பணத்துடன் காவல்துறை பணிமனைக்குச் சென்ற குமார் சிவபாதனை பிணையில் செல்ல அனுமதிப்பீர்களா? என்று அங்குள்ள அதிகாரிகளைக் கேட்டார்.

ஆயினும் சிங்களம் தெரியாத இந்த தமிழ் இளைஞனிடமிருந்து எதனையும் தெரிந்து கொள்ள முடியாமல் சலிப்படைந்த காவல்துறையினர் கொழும்பில் புலிகள் இருக்குமிடங்களைக் கண்டு பிடிப்பதற்குப் பொறுப்பாகவிருக்கும் குற்றவியற் புலனாய்வுப் பிரிவிடம் அவனை ஒப்படைப்பதற்கு தீர்மானித்தனர்.

பொறளை காவல் துறைப் பணிமனையை விட்டு வெளியேறிய குமார் தள்ளுவண்டியைத் தள்ளிய வண்ணம் ரொறிங்டனை நோக்கிச் சென்று இலக்கு ஒன்றிற்காக மீண்டும் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் இம்முறையும் இவரது பணி நிறைவேறவில்லை.

காலை 11 மணிக்குச் சிறிது முன்னராக இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் பின் நுழைவாயிலில் காவற் கடமையில் இருந்த காவற் படையினர் குமார் தனது வண்டியை வெகுவேகமாக தங்களை நோக்கி தள்ளிக் கொண்டு வருவதனையும் அவதானித்தனர். இவர் கறுப்பு நிற நீளக் காற்சட்டையும் ஒரு சேட்டும் அணிந்திருந்தார்.

காலை 10-53 மணியளவில் மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகத்திற்கு வெளியே சரி நேராக தள்ளுவண்டி வந்த போது குண்டு வெடித்தது இக்குண்டு வெடிப்புச் சத்தம் ஒருமைலுக்கப்பால் கேட்டது.

பதினைந்து பொது மக்களும் குமாரும் அவ்விடத்திலேயே மாண்டனர் மேலும் நால்வர் கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட போது இறந்தனர். இக்குண்டு வெடிப்புச் சத்தத்தை கேட்ட கொழும்பு மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவர்களும் மற்றும் தாதிமார்களும் விபத்து சேவைக்கு முன்னுள் முதலாவது அம்புலன்ஸ் போய் நிற்பதற்கு முன்னராகவே அதிக எண்ணிக்கையிலான காயப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கு முகமாகத் தயார் நிலையில் காணப்பட்டனர். அம்புலன்ஸ் அபாயஒலி எழுப்பிய வண்ணம் விரைந்தது.

எனினும் மேலும் நால்வர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது மரணமானார்கள் அன்றைய தினம் மேலும் இருவர் இறந்தனர். இறந்தோர்ன் தொகை 22 ஆக உயர்ந்தது. ஐம்பது பேர் காயமுற்றனர்.

முதலமைச்சரின் அலுவலகத்துள் இடம்பெற்ற படுகொலை மிகப் பயங்கரமானதாகும். இப்பழைய கட்டிடத்திற்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. ஆனால் தளபாடங்கள், புத்தகச் சட்டங்கள் மற்றும் கோவைகள் அடங்கிய அலுமாரிகள் அனைத்தும் தூக்கி வீசப்பட்டு துண்டு துண்டுகளாகச் சிதறிக் காணப்பட்டன.

இறந்தோர்களுள் அநேகர் வரவேற்புமண்டபத்தில் இருந்தவர்களாவர். இவர்கள் முதலமைச்சர் சுசில் பிரேமஜயந்தவைச் சந்திக்கவந்திருந்தவர்களாவர். இவர் இப்பதவியை ஏற்று இருகிழமைகள் மட்டுமே கழிந்துள்ளன. இந்தச் சம்பவம் நடைபெற்றநாள் தான், கிழமை தோறும் அவர்பொது மக்களை சந்திக்கும் நாளாகும்.

குண்டு வெடிப்பு நிகழ்ந்த வேளை தனது பணியாளர்களுடன் கூட்டம் ஒன்றை நடத்தி விட்டு, சற்று முன்னதாக [அப்பொழுதுதான்] வந்திருந்த முதலமைச்சர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரால் பின்பக்க வாயிலூடாக வெளியே அழைத்துச் செல்லப்பட்டார்.

சுதந்திர சதுக்கத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்த மணிக்கூடு 10 53 உடன் நின்று விட்டது. தள்ளுவண்டியில் சிதறுண்ட துண்டுகளுக்கு அப்பால் 20 யார் தொலைவில் முகம்மேலே பார்த்தபடி குமாரின் உடல் கிடந்தது. தள்ளுவண்டியில் சக்கரங்கள் 30 யார் தொலைவில் காணப்பட்டன. குண்டு வெடிப்பினால் சிதறுண்ட செவ்விளநீர்ச் சிதறல்கள் இப்பகுதியெங்கும் காணப்பட்டன.

அவ்விடத்திலும் அந்த நேரத்திலும் குமார் ஏன் தனது உயிரை மாய்த்துள்ளான் என்பதுபற்றி ஒருவருக்கும் தெரியாது. குற்றவியல் தடுப்பு பிரிவுக்கு ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை சிவபாலன் அன்றையதினம் அளித்திருப்பான் என்று குமார் நம்பியிருக்கலாம். அவ்வாறுவாக்குமூலத்தை சிவபாதன் அளித்திருப்பானானால் தனது பயங்கரமான பணியை நிறைவேற்றுவதற்கு அந்த நாள் இறுதிநாளாக அமையும் என்று குமார் அறிந்து கொண்டதன் காரணமாக தனக்கு மிகச் சமீபமாகவுள்ள இலக்கு ஒன்றில் வைத்து குண்டை வெடிக்கச்செய்து தனது உயிரை மாய்த்திருக்கலாம்.

அல்லாவிடின் ரூபவாஹினியில் காவற்கடமையிலிருந்த கடற்படைச் சிப்பாய்களைக் கண்ணுற்றதன் காரணமாக மனந்தளர்ந்து பயப்பீதியுற்றதன் காரணமாக தனது உயிரை இவர் பலிகொண்டிருக்கலாம்.

அல்லாவிடின் ஒருவேளை தள்ளுவண்டியின் சக்கரம் ஒன்று பள்ளங்களில் விழுந்ததன் விளைவாக அதிற் பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் வெடித்திருக்கலாம்.

இதற்கானபதில் குமாருக்கு மட்டுமே தெரியும். எங்களுக்கு ஒருபோதும் தெரியமாட்டாது

அன்றை தினம் சிவபாதன் குற்றவியல் தடுப்பு பிரிவுக்கு அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தையடுத்து, இவ்விருவரும் தங்கியிருந்த சேரிப்புற வீடுகளைக்காவல்துறையினர் திடீரென முற்றுகையிட்டு வீட்டுச் சொந்தக்காரர்களைக் கைது செய்தனர்.

சேரிவீடுகளுக்குள்ளிருந்து மூன்று ''சயனைட்'' களையும் பல குளிகைகளையும் காவல்துறையினர் கண்டெடுத்தனர். இவற்றை பிரயோகிக்க வேண்டிய அவசியம் தற்கொலைப் படையினருக்கு ஒரு போதும் இருக்கவில்லை.

புலிகளின் இலக்காக ரத்வத்த விளங்கியதற்கான காரணத்தை யாவரும் அறிவர். இந்தப்பத்திரிகையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டது போல் யாழ் நகரை தாக்க வேண்டுமென்று ஆயுதப்படையினரைத்தூண்டியிருக்கின்றவர் என்ற வகையில் ரத்வத்த முன்னிலையில் திகழும் ஒருவராவர். இது புலிகளுக்குப்பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்க கூடிய செயலாகும்.

ஏப்ரல் 19 ம் நாளன்று விடுதலைப்புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறுவதற்கு முன்னர் கூட புலிகளுக்கு எதிராக முழு அளவிலான போரைத்தொடங்க வேண்டுமென்று இவர் சந்திரிகாவை வற்புறுத்தி வந்தார்.

அன்றிலிருந்து படையினர் மீது புலிகள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டதன் காரணமாக இனிமேல் சமாதானப்பேச்சு வார்த்தைக்கு அவர்கள் இணங்கமாட்டார்கள் என்ற எண்ணம் ஜனாதிபதியை ரத்வத்தையின் கருத்துக்களும் ஆலோசனைகளுக்கும் அடிபணியவைத்தது.

படைரீதியான பின்னணியை ஜனாதிபதி பெற்றிருக்காததன் காரணத்தால் ஒரு

(5ம் பக்கம் பார்க்க)

பனைகள் எங்கள் செல்வம்
அதைப் பெருக்கின்
உயரும் எங்கள் தேசம்

# உயர் தமிழ்ப்பொலிஸ் அதிகாரிகளின் இடங்களுக்கு சிங்களவர் நியமனம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உயர் பதவி வகித்து வந்த தமிழ் பொலிஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டு அவ்விடங்களுக்கு சிங்கள பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

உயர்பதவி வகித்து வந்த பல பொலிஸ் அதிகாரிகள் தென்பகுதியில் கிராமப்புறங்களிற்கு படிப்படியாக மாற்றப்பட்டு அவ்விடங்களில் நியமிக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசு திட்டமிட்டே இவ்வாறு செயற்பட்டுவருவதாகவும் இதனால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்கட்சி எம்.பிக்களும் மக்களும் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் முக்கிய பகுதிகளிலுள்ள உயர் பொலிஸ் அதிகாரிகளை அவ்விடங்களிலிருந்து அகற்றுவதே அரசின் திட்டமென்றும் கூறப்படுகிறது. -சி

# நிதி முகாமைத்துவ பயிற்சி ஆரம்பம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் கணக்கு எழுதுநர்கள், கணக்குப் பதியுநர்கள் ஆகியோருக்கான நிதி முகாமைத்துவப் பயிற்சி நெறியின் 6வது சுற்று கடந்த வாரம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகியுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியுதவி அளிக்கப்படும். இப்பயிற்சி வகுப்புகள் யாழ். மாவட்ட கணக்காளர் சங்கத்தின் உதவியுடன் நடாத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் 30 பேர் தெரிவு செய்யப்பட்டு ஒரு மாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. -71

## பாடசாலைகள் இயங்கவில்லை

(தாளையடி)

அண்மையில் இடம்பெற்ற நாகர்கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் மீதான குண்டுத் தாக்குதலின் பின் இப்பிரதேசத்தில் கூடுதலான பாடசாலைகள் இயங்கவில்லை.

இயங்குகின்ற பாடசாலைகளிலும் மாணவர் வரவு வெகு குறைவாகக் காணப்படுகின்றது. -163

# புலிகளுடனான யுத்தம் குறித்து ஐ.நாவில் கதிர்காமர் விளக்கம்

(நியூயோர்க்)

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் விடுதலைப் புலிகளுடன் அரச படைகள் மேற்கொண்டுவரும் யுத்தம் குறித்து ஐ. நா. சபையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விளக்கமளித்துள்ளார்.

ஐ. நா. கூட்டத்தொடரில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இது பற்றி கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் அப்பாவி தமிழ் மக்களை காப்பாற்றவே அரச படைகள் போரிடுவதாகவும் இராணுவம் அப்பாவி மக்களை படுகொலை செய்வதாக வெளிவரும் செய்திகளில் எதுவித உண்மையுமில்லை எனவும் தெரிவித்தார்.

இதன் போது அவர் புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சி

## மழையினால் அகதிகள் பாதிப்பு

[அரியாலை]

நேற்று முன்தினம் பெய்த பெருமழையினால் இடிந்த கட்டிடங்களில் வசித்து வந்த அகதிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ். நகரிலும் அரியாலை பூம்புகார் முதலிய இடங்களிலும் உள்ளவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். -59

## சைக்கிள் திருட்டு

(நெல்லியடி)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு முன்னால் பட்டப்பகல் வேளை சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மந்திகை கிளை இல: 1-ல் இடம் பெற்றது.

சைக்கிள் உரிமையாளரான சோமசுந்தரம் இதுபற்றி பருத்தித்துறை தமிழீழ காவல் பணிமனையில் புகாரிட்டுள்ளார். -160

## பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சித்த மருத்துவத் தலைவர் வைத்திய கலாநிதி சு. பவானியை தலைவர் பதவியிலிருந்து பல்கலைக்கழக நிர்வாகம் நீக்கியதை ஆட்சேபித்துக் காரணம் கோரி, கடந்த 2ம் திகதி முதல் பகிஷ்கரிப்பை மேற்கொண்ட மாணவர்கள், முன்னாள் துறைத் தலைவர் சு. பவானியின் வேண்டுகோளுக்கிணங்க இன்று 10ம் திகதி முதல் தமது விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

# மாணவர்களை நல்வழிப்படுத்தும் ஆசிரியரின் பணி போற்றுதற்குரியது!

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தால் இன்றைய மாணவர் சமுதாயம் பல்வேறு வகையில் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்ளது. இச் சமுதாயத்தை நல்ல வழியில் வழிநடத்தி உயர்ந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களாக உருவாக்கித்தருபவர்கள் ஆசிரியர்கள்தான். அவர்கள் இந்த மண்ணையும் மக்களையும் நேசித்து தாம் படும் இடர்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சேவைசெய்வது பாராட்டப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர்தின நிகழ்வின்போது யாழ்ப்பாணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க நிர்வாக அதிகாரி வி.ரி சிவலிங்கம் உரையாற்றுகையில் தெரிவித்தார். இந் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: இன்றைக்கு இந்த மண்ணிலிருந்து பல புத்திஜீவிகள் பணத்துக்காக நம் நாட்டை மறந்து சென்றுவிட்டார்கள். ஒரு நல்லாசிரியன் எப்போதும் தன் சமூகத்தில் உயர்ந்த லட்சியத்துடன் தான்பெற்ற கல்வியை தனது சமூகத்துக்கே வழங்கி வருகிறான். இன்றைக்கு இக் கல்லூரியில் நம்முன்னே காணப்படும் சகல நல்லாசிரியர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள். இவர்களுக்கு குடும்பச் சுமையுண்டு. சௌகரியமாக வாழ நினைப்பார்கள் அப்படியிருந்தும் இவர்கள் தமிழ் சமுதாயத்தை நல்வழிப்படுத்த மெழுகுதிரிபோல் தம்மை உருக்கிக்கொண்டு சேவையாற்றுகின்றனர்.

இன்றைக்கு ஒரு மாணவன் பெறும் பெறுபேறுகள் எல்லாம் அவனைக் கற்பிக்கும் ஆசிரியரால் தான் பெற்றுக் கொள்கிறான். இதனைத்தான் நம்முன்னோர்கள் 'குருவே தெய்வமென' போற்றினர். குருகுல வாசத்தில் அவன் அடைந்த பெருமை அத்தகையது'' என்றார்.

இந்நிகழ்வில் மாணவர் சார்பில் வி. எஸ். செந்தூரனும் பழைய மாணவர் சார்பில் திரு. எஸ். சுந்தரலிங்கமும் உரையாற்றினர்.

எஸ்-சி

## இரத்தினபுரி

(3ம் பக்க தொடர்ச்சி)

யிலும் அதனை சுற்றியுள்ள பகுதியிலுமுள்ள தாழ்ந்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

## தனியார்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை உலக வங்கியின் ஆலோசனையின் பேரிலும் வற்புறுத்தலிலும் இலங்கை அரசு பல அரச நிறுவனங்களையும் தோட்டங்களையும் தனியார் மயப்படுத்தி வருவதால் நாட்டில் அரசுக்கு எதிராக கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதும் தெரிந்ததே.

அண்மையில் தனியார் மயமாக்கலுக்கு எதிராக தோட்டப்பகுதிகளில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. சி

## றொறிங்டன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கசப்பான முடிவை எட்டுமட்டும் போரை நடத்துமாறு முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி, ரத்வத்தைக்கு வழங்கினார். இப்படி ரத்வத்தையைக் கொலை செய்தால், படையினரினதும் அரசாங்கத்தினதும் மனோ நிலையும் நம்பிக்கையும் சீர்குலைந்துவிடும் என்பதையும் முப்படைகளுக்குமிடையில் மீண்டும் குழப்பம் ஏற்படும் என்பதையும், இதனால் யாழ்குடா நாட்டுக்கு விடப்படுகின்ற அச்சுறுத்தல் மறைந்துவிடும் என்பதையும் புலிகள் நன்கு அறிவர்.

நன்றி- தேர்ந்தகட்டுரைகள் —34

## சீவல் தொழிலாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி- கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இடிமுழக்கம் இராணுவநடவடிக்கையைத் தொடர்ந்து இப்பகுதிகளில் உள்ளஐந்நூறுக்கும்மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைக் கையைத் தொடர்ந்து இப்பகுதிகளிலிருந்து 500க்கும் மேற்பட்ட சீவல் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தற்பொழுது இவர்கள் தொழில் எதுவும்இன்றி தமது குடும்பங்களைக் காப்பாற்றுவதற்குப் பெரிதும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். 162-சி

## வங்கியில் காசோலை மாற்றுவதில் சிரமம்

(நெல்லியடி)

செப்டம்பர் மாதச் சம்பளத்தைக் காசோலையாகப் பெற்ற மந்திகை மருத்துவமனை ஊழியர்கள் பலர் தமக்கு வழங்கப்பட்ட காசோலையை எடுத்துக்கொண்டு நான்கு முறை வங்கிகளில் மாற்றுவதற்கு அலைந்து திரிகின்றார்கள்.

வங்கிகளில் மட்டுப்படுத்தப்பட்டளவில் பணம் வழங்கப்படுவதே இதற்குக் காரணமெனவும் வைத்தியசாலை ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். -160

## நடமாடும் சுகாதார சேவை

(கொழும்புத்துறை)

வட பிராந்திய சித்த மருத்துவ நிலையம் நடமாடும்சுகாதார மருத்துவ சேவைகளைத் தற்போது நடத்திவருகின்றது.

தற்போதையபோர்க்காலச் சூழ்நிலையில் யாழ் குடாநாட்டில் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்து நெருக்கமாக வாழும் இடங்களில் இந்த நடமாடும் இலவச சித்த மருத்துவ சுகாதார சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 154

## கொண்டாடிக் கொண்டே...

அன்றே... கருவி தூக்கி நின்று,
அந்த வல்லரசையே
விழிக்க வைத்த தமிழிச்சியர்
இன்று! அட்ட திக்கையுமே
வியப்பில் ஆழ்த்தி நிற்கிறார்.
ஈழத்துக் கடலோ......
எக்காளமிட்டு ஆர்ப்பரிக்க
உலகத்தின் உச்சியிலே
தமிழிச்சியின் வீரம் வரிவடிவாக
வரையப்பட்டுக் கொண்டிருக்கிறது.
ஒக்ரோபர் பத்து!
தான் தொடக்கிவைத்த பெருமையில்
குதூகலித்தே நிற்கிறது.
நகர்ந்து நிற்கும் இன்றைய நாள்
நலிந்தே நின்ற... நங்கையரையும்
நிமிர வைத்து நிற்கிறது.
களிப்பில் முக்குளிக்கும் பெண்ணினமே!
கொண்டாடிக் கொண்டே......
கொடுமைகளைச் சாய்க்க துணையாவோம்.

—மீசாலையூர் கமலா

## மாலதி எம் மன வானத்தின் முழுமதி

பூவுக்குள் இருந்திங்கே
பூகம்பம் விளைந்தது
சாவுக்குள் சரித்திரம்
தாய்க்குலம் வரைந்தது

மானத்தின் தோற்றுவாய்
மங்கையரைப் போற்றுவாய்!
ஈனத்தைத் துடைக்கவே
எழுந்தது பெண்புலி

காலத்தின் கட்டளை
கன்னியர் போர்ப்படை
ஞாலத்தில் பெண்குலம்
நலியுமா பார்க்கலாம்!

ஈழத்தில் தமிழ்ப் பெண்கள்
எழுந்திடும் போர்ப் பண்கள்
காலத்தின் குரலெனக்
கண்டுகொள் உலகமே!

எங்களின் தங்கையர்
இசைத்திடும் பரணியில்
மங்கை நல் ''மாலதி''
முதல்வரி ஆகினள்.........!

''மாலதி'' எம் மன
வானத்தின் முழுமதி
ஆனவள், என்றென்றும்
அஞ்சலிக் குரியவள்.

நிலா தமிழின்தாசன்

(இன்று 10-10-95 முதல் பெண் மாவீரர் 2ம் லெப் மாலதியின் எட்டாவது நினைவுநாள்)

# தேசியபாதுகாப்பு நிதிசேகரிப்பு இடவிபரம்

## உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

| திகதி | காலம் | கிராம சேவகர் அலுவலர் பிரிவு | நிதிபெறும் இடம் |
|---|---|---|---|
| 11-10-95 புதன் | பி. ப. 3-00-5-00 | ஏழாலை யா/201, யா/202 யா/203, யா/204, 205 யா/206 | அன்னை பூபதி கலை அரங்கம் உரும்பிராய் |
| 16-10-95 திங்கள் | | புன்னாலைக்கட்டுவன் யா/207, யா/208 | ,, ,, |
| 21-10-95 சனி | | ஈவினை யா/209 குப்பிளான் யா/210 யா/211 சுன்னாகம் யா/195, யா196 யா/197, யா/198 யா/199, கந்தரோடை யா/200 தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் (அன்னை பூபதி கலை அரங்கில் ஒப்புதல் அளித்தவர்களும்) | ,, ,, |
| 12-10-95 வியாழன் | பி.ப.3-30 தொ: 5-30 வரை | தாவடி யா/192, யா/193, யா/194 | தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை தாவடி |
| 14-10-95 சனி | 3-30பி. ப 5-00 வரை | உடுவில் சிற்றூர் யா/182, யா/183 யா/184, யா/185 யா/186 சங்குவேலி யா/187 | உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை |
| 18-10 95 புதன் | பி.ப.3-00-5,00 வரை | இணுவில் யா/188 யா/189, யா/190 யா/191 | இணுவில் மத்திய கல்லூரி |

# போரை நடத்திக்கொண்டு பிரச்னையை தீர்க்க முடியாது

(கொழும்பு)

யுத்தம் நடத்திக்கொண்டு பிரச்னையைத்தீர்க்கமுடியாது. இராணுவத்தில் சிங்கள இளைஞர்கள் வேலைவாய்ப்புகளாகவே இணைகிறார்கள் என்று பி. பி. சி. சந்தேசியவுக்கு பேட்டி வழங்கிய மஹாகடவ பியாகரதேரோ என்னும் புத்த பிக்கு தெரிவித்துள்ளார்

இனப் பிரச்னைத் தீர்வுத் திட்டத்தை எதிர்க்கும் மல்வத்தை மாநாயக்க தேரர்களின் கருத்தை, இலங்கையில் உள்ள அனைத்துப் புத்த பிக்குகளின் கருத்தாக எடுக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்கள் தங்கள் அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்களாகவே இருக்கின்றார்கள். அவர்களின் கருத்துக்களை அனைத்துப் பிக்குகளின் குரலாக எடுத்துக் கொள்ளமுடியாது என்றும் அவர் மேலும் கூறினர். ம-ரி

# செய்தித் தணிக்கை முறையினால் மக்கள் பாதிப்பும் மறைப்பு

(கொழும்பு)

இலங்கையில் பத்திரிகைத் தணிக்கை இன்னும் நடைமுறையில் இருப்பதினால், தற்போது வடபகுதியில் நடைபெற்றுவரும் யுத்தத்தினால் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை சரியாகத் தெரிந்து கொள்ள முடியாது இருப்பதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

இதுபற்றி பி. பி. ஸி மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்திலுள்ள அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் தற்போது இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்று வருகின்றது. இவைபற்றியசரியானசேதவிபரங்கள், பத்திரிகை தணிக்கையினால் அறிந்து கொள்ள முடியாது இருக்கின்றது.

மேற்படி யுத்தத்தினால் யாழ். மாவட்டத்தில் மிக மோசமான உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. குறிப்பாக இங்கு மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதினால் இப்பகுதிகளில் உள்ள பேக்கரிகள் பாண் உற்பத்தியை நிறுத்தியுள்ளன. இதை யாழ் நகரிலுள்ள அரச அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவுப்பொருட்கள் கடந்த ஆறு வாரங்களாக வழங்கப்படவில்லை. கடந்த மூன்று மாதங்களாகஅரசாங்கம், ஆக மூன்று உணவுக்கப்பல்களை மட்டுமே யாழ். மாவட்டத்துக்கு அனுப்பியுள்ளது'' என்று பி. பி. ஸி. தெரிவித்தது. வி - ரி

# தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பு வழங்காதீர்; உலக நாடுகளுக்கு இலங்கை கோரிக்கை

(வாஷிங்டன்)

தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டாமென உலக நாடுகளை இலங்கை கேட்டுள்ளது,

தீவிரவாதச் செயல்களை திட்டமிடுவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் தங்கள் பிரதேசங்களில் இடமளிக்கும் நாடுகளும் தீவிரவாதக் குற்றச் செயல்களைச் செய்யும் நாடுகளே என ஐ. நா. சபையின்இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி எச். எல். டி. சில்வா தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் ஐ. நா. சட்டக்குழு முன்னிலையில் உரையாற்றிய அவர் விடுதலைப்புலிகள் லண்டனில் தனது சர்வதேச அலுவலகத்தையும் பாரிஸில் ஒரு அலுவலகத்தையும் நியூயோர்க், ரொரன்ரோ ஆகிய இடங்களில் அமைப்புக்களையும் வைத்திருக்கிறது.

இவர்கள் தமது நடவடிக்கைகளுக்கென தாராளமான வசதிகளைக் கொண்டுள்ளனர். அரசியல் புகலிடம் கோருபவர்களையும் அகதிகள் எனக் கூறிக் கொள்வோரையும் தாராளமாக வரவேற்கும் நாடுகளின் ஆதரவை புலிகள் பெற்றுள்ளனர்.

இத்தகைய அகதிகளை பராமரித்து வரும் தாராளமனப்பான்மையுள்ள நாடுகள் நட்பு நாடுகளுக்கு எதிராக மனிதாபிமானமற்ற செயல்கள் மேற்கொள்ளப்படுவதற்கு இந்த மனித நேய உதவி இடமளிக்கக் கூடாது. புலிகள் அதிநவீன உபகரணங்களையும் ஏவுகணைகளையும், விமானங்களையும், கப்பல்களையும் கொள்வனவு செய்வதற்கு கூட நிதிவசதிகளை கொண்டவர்களாக உள்ளனர்.

அரசின் சக்தி அழிக்கப்படும் போது அராஜகம் கட்டவிழ்த்து விடப்படுகிறது. தீவிரவாதிகள் இதனை நன்கு பயன்படுத்திக்கொள்கிறார்கள்

தேசிய தாராள மனப்பான்மை என்ற போர்வையில் தீவிரவாதம் எவ்வளவு அபாயகரமான வளர்ச்சியை பெறுகிறது என்பதையும் இவர் சுட்டிக்காட்டினார். சி-ரி

# ஐயாயிரம் தமிழ் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

ஐயாயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர் பதவிக்கு அடுத்த பத்து நாட்களில் விண்ணப்பம் கோரப்படவுள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற பாடசாலை வைபவம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் இதுபற்றி மேலும் கூறுகையில்;

தமிழ்மொழி மூல பாடசாலைகளில் தற்போது எண்ணாயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. இந்த தொகையில் ஐயாயிரம் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மலையக தோட்டப்புறப் பாடசாலைகளுக்கு வேறாகவும் ஏனைய தமிழ் பாடசாலைகளுக்கு வேறாகவும் ஆசிரிய நியமனங்கள் செய்யப்படும். இது தொடர்பான விண்ணப்பங்கள் இன்னும் பத்து நாட்களுக்குள் கோரப்படும் எனவும் தெரிவித்தார். சி- ரி

# கல்விக்கழக ஆசிரியர்க்கு நாளை முதல் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த கல்விக்கழக ஆசிரியர்கட்கான புரட்டாதி மாத உதவுதொகை கொடுப்பனவு கல்விக் கழக நடுவப் பணியகத்தில் பின்வரும் நாள்களில் பிற்பகல் 2 மணிமுதல் வழங்கப்படுமென, தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் தங்கள் கல்விக்கூட முதல்வரால் உறுதிப்படுத்தப்பட்ட படிவத்தினைப் பெற்று குறிப்பிட்ட நாள்களில் வருகை தரும்படி கேட்கப்படுகின்றனர்.

நாளை 11ம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர், 12ம் திகதி, உடுவில் தெல்லிப்பழை, 13 ம் திகதி சங்கானை சண்டிலிப்பாய். -ரி

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியிலுள்ள விறகுசாலை, அரிவுசாலை உரிமையாளர்களுக்கான கிளைச் சங்கம் அமைப்பதற்கான ஒன்றுகூடல், நாளை 11ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு திருநெல்வேலி விவசாயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ரி

## மட்டு. காஞ்சிரங்குடா

(1ம் பக்க தொடர்ச்சி)

பலியான அனைவரும் தமிழர் எனவும் நீரில் மூழ்கிய பலர் ஒருவாறு காப்பாற்றப்பட்டும் நீந்திக்கரை சேர்ந்ததாகவும்தெரிவிக்கப்படுகிறது.

எனினும் படகு விபத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. சி-ரி

## 2-ம் லெப். மாலதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டு மலர்தூவி ஈகை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

இதனைவிட வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் பகுதிகளில் மாலதியின் எட்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 170-ரி

## வலி கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இழப்புக்களை அரசு மூடிமறைக்க முற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

மின்னல் தாக்குதல் நடவடிக்கையில் பங்குபற்றிய படையினரில் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் படையினரின் நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ரி

## மட்டக்களப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து 36-ம் கொலனி நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக்காலை 7.43 மணியளவில் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலில் காயமடைந்த படையினர் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வெற்றிகர தாக்குதலில்

- ★ 3.8 டொங்கான் -1
- ★ கோல்ட் கொமண்டோக்கள் -4
- ★ ஏ. கே. ரக துப்பாக்கிகள் -3
- ★ 40 மி. மீ. எறிகணைகள் -12
- ★ கோல்ட் கொமாண்டோ ரவைக்கூடுகள் -7
- ★ ஏ. கே. ரவைக் கூடுகள் -10
- ★ 5-56 ரக ரவைகள் -375
- ★ நடுத்தர ரவைகள் -50
- ★ கைக்குண்டுகள் -3

என்பன கைப்பற்றப்பட்டன.

இம்மோதலில் மேஜர் ஆரமுதன் அல்லது லக்கிதாஸ் [சுறுவக்கம்பி சிவநாதன் -மட்டக்களப்பு], கப்டன் சத்தியவீரன் அல்லது சக்தி [அழகரத்தினம் அமிர்தலிங்கம் -மட்டக்களப்பு], வீரவேங்கை செல்வகாந்தன் [வெள்ளைக்குட்டி புவீந்திரராசா- மட்டக்களப்பு] ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். -ரி

## கடற்படைக்கு

[1ம் பக்க தொடர்ச்சி]

நேரடியாக கடற்படை தளங்களுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கடற்படை மீது அதிகரித்து வருவதனை அடுத்தே அரசாங்கம் கடற்படைக்கு கூடிய ஆட்களை சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. கே-ரி

## காணமல்

[1-ம பக்கத்தொடர்ச்சி]

குறிப்பிட்ட கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது, படையினரால் பராவெளிச்சம் பாய்ச்சப்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து, இம்மீனவர்கள் வீடு திரும்பவில்லை. இவர்களில் குருநகர் 2ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எஸ். நடராசா(வயது30), கி.பி.ஜெயசீலன்(வயது 30) ஆகியோரின் சடலங்கள் நேற்றுக் கரை ஒதுங்கின.

இவர்களுடன் மீன் பிடிக்கச் சென்ற பற்றிக் கொலின்ஸ் (24 வயது) என்பவரின் நிலை பற்றித் தெரியவில்லை.

இதேவேளை குருநகரிலிருந்து நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற 7 மீனவர்களும் இதுவரை திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. 95-170-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618